[illegible]

30.3.98.

1998

474. அனுபவ வைத்தியம்

விந்துக் கட்டு

வங்கம் பலம் ஒன்றுக்கு முலைப் பாலில் நாலு சாமம் ஊறக் கொடுத்து சுத்தி செய்து சிறு அம்மான் பச்சரிசி சமூலம் பலம் ஒன்றில் வைத்து மேலே சீனா சுத்தி கட்டியில் வைத்து அதின் மேல் சோற்றுக் கொட்டை பலம் 8 அடுக்கி சிறு தீயாட்டு கொளுத்தி கொட்டை நீக்கி சுத்த மாம்பு அத்தி எடுக்க கட்டும் இதில் மேகம் போகும் கை கடுப்பு வெடிப்பு ஊறுக்கு போம் இருவேளைக்கு தேன், நெய் அனுபானத்தில் வராகனெடை கொடுக்கவும்.

லேபனத்துக்கு

இரசம் வராகனெடை 1.

உத்தாமணிச் சாறு விட்டு அரைத்து தண்டில் பூசி ஈரம் உலர்ந்த பின்பு புணரவும் அதிக இன்பம் தரும் மோகமாகுவாள்.

மண்டூர மாத்திரை

வெள்ளைச்சாருவேளை 3ரு

குந்து(ராமு) மிளகு பலம் - வ, பழைய கிட்டம் பலம் 5 இவற்றை அரைத்து பனை வெல்லம் பலம் 5 கூட்டி அரைத்து கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து சாப்பிட்டுவர ஊதுகாமாலை, பாண்டு, வீக்கம் காமாலை, வயிறுவலி, வாய்வு அகன்றிடும்.

இரத்தமூலம் நிற்க

இம்பூரல் வேர்ப்பட்டையை

அரைத்து நெய்யில் வடைசுட்டு சர்க்கரை தொட்டு 5 - நாள் சாப்பிடவும். மூலம் ரத்தம் நிற்கும்.

கவு(ராக்) தும்பை இலையை

அரைத்து நெய்யில் கிளறி சர்க்கரை கூட்டி சாப்பிட இரத்த மூலம் நிற்கும். கை கண்டது.

வீரியவிர்த்திக்கு

இசக்கோல்விதை, நீர்முள்ளி விதை, கசகசா வெள்ளைக்கு பலம் - வ திராட்சை பசுவின்பாலில் ஊற வைத்து காலை அரைத்து முழுங்கவும்.

நாகபற்பம்

நாகம் பலம் 1 மெல்லியத் தகடாய்
பொட்டணாங்கட்டி அன்ன கல்லில் வைத்து அதை
ஊட்டு நாளங்கவும். நாலு சாமம் பார்க்கவும் எடுத்து
அம்மி வைத்து பச்சை அன்னாக்கல் பலம் 1, பொரித்த
அண்ட ஓடு பலம் 1 இவை இரண்டு இலைக்கள்ளிச்சாறு
ஊட்டு அரைத்து மூசையும் மூடியும் செய்து உலர்த்தி
அனலில் காட்டி உறுதிப்படுத்தி கொண்டு மூசையில்
மேற்படி நாகக் கட்டியை வைத்து அதில் மேற்படி
இரசம் ஊட்டு மூடி வஸ்திரகாயம் செய்து காய்ந்த
பின்பு மண் சீலை மூன்று செய்து சாண்முழ அகல
குழி வெட்டி அதில் வரட்டி அடுக்கி புடமிட்டு
சாங்கசித்தமாய் ஆறவிட்டு எடுக்க நீறும். இதை
சுவாசகாசம் சன்னிபாதங்களுக்கு தேனில்
உரிசகனிடை கொடுக்கவும். மற்ற வியாதிகளுக்கு
அநுபானம் அறிந்து கொடுக்கவும். பத்தியம் புளி,
? புகை, சுக்கிந்துவராதிதம் தயிர், நெய், பசுதால்
முருங்கை, துவரை, தாம்பூலம் கூடாது.

குழந்தைகள் இளைப்பு இருமலுக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய், தேன், நெய் வகைக்கு பலம் ஒன்று கூட்டி இதில் தியாள் பலம் 2 பொடித்து போட்டு சர்க்கரை பலம் 2 போட்டு மெழுகு பதமாய் காய்ச்சி காலையில் கரண்டி அளவு கொடுக்கவும். அதிகமாக இருந்தால் இரண்டு நேரமும் கொடுக்கவும். குழந்தைகளுக்கு ஏற்படும் இளைப்பு, இருமல் தீரும்.

வாதசன்னி சிரோ வியாதிகளுக்கு அக்கிராணம்.

மயில் துத்தத்திற்கு துளசி சுத்தி புடம் போட்டு எடுத்து தூளாக்கி சுக்கு உடன் சேர்த்து அரைத்து வைத்து கொண்டு அக்கிராணிக்க வாதம் அறும். நாக்கில் தண்ணீர் வரும்.

இலுப்பை தூள் கருப்பலம்! மயில் துத்தம் பலம் 7 கிராம்பு இரண்டும் சேர்த்து பொடி செய்து அக்கிராணிக்க சன்னி சிரோ வியாதியும் தீரும்.

சன்னிக்கு கலிக்கம்

நாபாயல் பன்றுமிதை கல்தாரா மாத்திரையை இலுப்பை கட்டி குளிர்ந்த தண்ணீரால் உரைத்து அதன் மேற்படி மாத்திரை உரைத்து கண்ணில் கலிக்கமிடவும். அதிவேகமான சன்னியை மாற்றும்.

பல் உறுதிக்கு

வெள்வேலம்பட்டை, மகிழம் பட்டை, கருவேலம் பட்டை இலவம் பட்டை இவைகளை சமமாக தண்ணீரில் போட்டு இறுக காய்ச்சி மண்டலம் கொப்பளிக்கவும். பல் உறுதியாகும்.

கற்பம் கரைய

பேய்ப்பீக்கம் விதையை அரைத்து குடிக்க கரையும்.

கடுகு, நல்லெண்ணையும் கொள்ள பிண்டம் விழும்.

கடுகு, இந்துப்பு, காயம் இவை கூட்டி பழங்காடியில் கொள்ள பிண்டம் விழும்.

ரணங்களுக்கு மாவர்த்தி

காரியரேக்கு கத்திரித்து கல்வத்திலிட்டு காட்டாமணக்கு பால் விட்டு நெருக்கு அரைக்கவும். காரியம் சாயாடை கற்பூரம் போட்டு பசுவின் வெண்ணெய் போட்டு அரைத்து சகல ரணங்களுக்கும் சீலை போடவும்.

சகல ரணங்களுக்கும் சூக்ஷம மருந்து

காரமான புகையிலை உரித்து காம்பு பலம் 1 கல்வத்தில் தூள் செய்து காசுக்கட்டி

வீராகனிடை 1 கூட்டி உமிநீர் விட்டு நன்றாய் மெழுகு பதமாய் அரைத்து கொண்டு எப்பேர்கொத்த (எப்படிப்பட்ட) ரணங்களுக்கும் சிவக்க கழுவி இந்த மருந்தை உமிநீரில் குழப்பி தடவ 35 நாள் தடவிவர அருகண்ரணம், கருகன்மேகரணம், கிரந்திரணம், கண்டமாலை, புண்புரை யோடினதுப்பு உருவும் சென்ற ரணங்களும் தீரும்

எப்பேர்கொத்த (எப்படிப்பட்ட) ரணங்களுக்கும் அதிவேகமாக ஆறுகிற மாலாலித்திரி.

தேங்காயெண்ணெய்படி - வ, ஆலம்பால்படி ஜு, அரசம்பால்படி ஜு, உன(நுணா)ன இலைச்சாறு படி ஜு, வேலைச்சாறுபடி ஜு, கிழுவைசாறு படி ஜு இவற்றை எல்லாம் கூட்டி காய்ச்சி நிரண்டு உருகிற பக்குவத்தில் வெள்ளை மெழுகு வீராகனிடை 2

ச. ரசகற்பூர பொடி வீராகனிடை 1 போட்டு பதமாய் காய்ச்சி இறுத்து எப்பேர்கொத்த (எப்படிப்பட்ட) ரணங்களுக்கும் போடவும். திரியோடின ரணங்களுக்கு திரியிலிட்டு உதவும். அதிவேகமா ஆறும். கைகண்டது.

பாரிச வாய்வு முதல் சகல வாய்வு சன்னிகளுக்கும் இசிவுக்கும் தயிலம்.

இரசம், கெந்தி, தாளகம், லிங்கம், வெள்ளை ஆக வகைக்கும் வராகனெடை பொடி செய்து வேப்பெண்ணெய் சேர் 1 விட்டரைத்து சுட்டு தயிலம் வாங்கி மேலுக்குந் தடவி உள்ளுக்கு 3ரு வராகனெடை 2-வராகனெடை கொடுக்கவும் பக்கவாய்வு சகல சன்னிகளும் தீரும். இந்த தயிலம் மூன்று நேரம் மடத்து வாங்கவும்.

தோஷ சன்னி தீர கஷாயம்.

கடலையாருஞ்சி செடியை கஷாயம் வைத்து அடிக்கடி சாப்பிட்டு வரவும்.

இளை இருமலுக்கு

தும்பைபூ ஒருபிடி மென்று முழுங்கவும். இப்படி 7-நாள் சாப்பிடவும். சகல இருமல் தீரும்.

முசுமுசுக்கை பழுங்கள்ளியும் அரைத்து பனைவெல்லம் சேர்த்து அடை சுட்டு வைத்து கொண்டு சாப்பிட்டு வரவும்.

சீதபேதிக்கு

நல்லவெல்லம் பலம் 1 அத்திபால் பலம் 5 விட்டு கரைத்து 2 வேளை கொடுக்கவும். சீதபேதி தீரும்.

கெந்திபற்பம்

கெந்தகத்தை கல்வத்திலிட்டு சிவந்த கீழாநெல்லிச் சாறுவிட்டு 10 - நாள் அரைத்து வில்லை தட்டி காய்ந்த பின்பு எடுத்து கொஞ்சம் பள்ளம் தோண்டி மணல் கொட்டி நடுவே வில்லையை வைத்து மேலே வராட்டியை அடுக்கி புடமிட பற்பம் ஆகும் சகல வாய்வு குட்டங்களும் தீரும்.

தளர்ந்த எழுந்தன்மையம் நெறிக்கும் வீரியவிர்த்திக்கும்.

அமுக்கிராங்கிழங்கு சூரணம் பலம் 4 கிராம்பு சூரணம் பலம் 1 கலந்து வைத்து கொண்டு பசும் நெய்யில் வராகனெடை 1 சாப்பிட்டு வரவும் விர்த்தியும் விகதாளமும் பலமும் ஸ்ரீகளுக்கு தளர்ந்த தன்மையம் நெறிக்கும்.

வாதங்களுக்கு குழம்பு.

வெள்ளை, ரசம், கெந்தி, பெருங்காயம், மனோசிலை, துருசு, வேப்பம்பருப்பு ஆக வகை 7-ம் சம அளவு கூட்டி நேர்வாளப்பருப்பு இதற்கு ரெட்டிப்பு (இரண்டு பங்கு) கூட்டி எருக்கம்பாலில் ஒரு சாமம் அரைத்து பின்பு வேப்பெண்ணெயில் ஒரு நாழிகை அரைத்து எருமை கொம்பு சிமிழில் அடைத்து கொண்டு எந்த வாதங்களும் பயறு அளவு எடுத்து வெற்றிலையில் மடித்து உள்ளுக்கு கொடுக்கவும். உருண்டையும் மாக்கவும். மாடுகளுக்கு

நாக்கில் தேய்க்கவும். அதன் சாறை அருந்த ரத்தம் சுருக்கவும். அதில் மருந்து தொட்டு கலக்கமிடவும் வாதமும் சோளபயிற் மேய்ந்ததும் தீரும். மேலும் சோறும் சாப்பிடவும்.

தேளுக்கு மருந்து.

5\.

ஆகாசகெருடன் கிழங்கு, உட்டாறை, கல்சுண்ணாம்பு, நீர்கோவை, எச்சம், மயிலாடி சுட்டகரி ஆக அனைத்தும் எருக்கம்பால் விட்டு அரைத்து மாத்திரைகளாக பண்ணி முலைப்பாலில் உரைத்து கொட்டின வாயில் தடவவும். அல்லது குளிர்ந்த தண்ணீரில் உமிநீரும் உரைத்து தடவி அனலில் காட்டவும்.

விஷக்கட்டு சகல சன்னிசுரம் வாய்வுகள் தீர.

விஷ்கம் மரம் ஒன்றுக்கு நிலைப் பால், தேன், எலுமிச்சம்பழச்சாறு ஆக மூன்றும் சம அளவு கூட்டி இரண்டு சாமம் சுருக்கி கொடுத்து பின்பு பாலாங்கிச்சாம்பிராணி, கற்பூரம், நெல்லிக்காய் கெந்தி ஆக மூன்றுக்கு விளக்கி தூளாக்கிட இரண்டு பொடி பண்ணி

கரண்டியால் போட்டு முன் வாங்கி கட்டிகளை போட்டு அனலில் மாரட்டி, மாரட்டி எரிக்க பொடி கருகின உடனே எடுக்க நல்ல கட்டாகும். சன்னி சுரங்களுக்கு கொடுக்கவும்.

தந்தவாயாதிகள் எல்லாவற்றிற்கு

கருப்பான் குண்டு இடித்து தண்ணீர் ஊட்டு பாகமாய் காய்ச்சி காசுக்கட்டி பலம் ஒன்று கூட போட்டு காய்ச்சி கொப்பளிக்கவும். தந்தஊட்டி, தந்தவாய்வு, தந்த அசைவு தீர்ந்து நோவு தீரும். கை கண்டது.

சகல சன்னி, சூதகவாய்வு குடைச்சல் தீர சூரதயலம்.

வேப்பெண்ணெய் சேர் ஒன்றுக்கு ரசகற்பூரம் பலம்-1/4 கூட்டி அரைத்து சுடர்தயலம் இறக்கி இரண்டுதரம் மடக்கி இறக்கி வைத்திருந்ததில் நடவா கொடுக்க சகல சன்னி, சூதகவாய்வு குடைச்சல் தீரும்.

ரணங்களுக்கு தேங்காயெண்ணெய்.

சிம்பல் தேங்காய் 2 பால்பிழிந்து ரசகற்பூரம் உறாகணை கூட ஒன்று பொடித்து போட்டு காய்ச்சி ரணங்களுக்கு தடவவும். கடுகை உள்ளுக்கு சாப்பிடவும்.

ரசத்தினால் வாய் பாடிப்புக்கு

வெந்நீரில் எலுமிச்சம் பழம் பிழிந்து படிகாரம் பொடி பலம் போட்டு கொப்பளிக்க வாய் பாடிப்பு தீரும்.

கோமா எண்ணெய் - சகல மேகமும் தீரும், வீரிய விருத்தி

கற்பூர சிலாசத்து பலம் ஒன்று ஆக்க பொடி பலம் 4 வைத்து அதில் போட்டு கரைந்து அதில் கந்தாமாமூ சேர் 5 பிசைந்து சார் பிழிந்த கிழங்கு சேர் - 2 ஊற்றி நன்றாய் துளாவி சிந்தாமணிக்கு எண்ணெய் சேர்த்து விட்டு துளாவி மெழுகு பதத்தில் இறக்கி கொண்டு காலமே சாப்பிடவும். அந்திக்கு இருகரண்டி அளவு சாப்பிடவும். இரண்டு மூன்று முறை பேதியாகும். மேகம் தீரும். ஆதி தாளிக்கும். இச்சாபத்தியம் 7 - நாள் சாப்பிட வீரிய விருத்தியாகும்.

6.

பயித்தியத்துக்கு

நிருவாசிகம், கருநொச்சியும் சம அளவு தட்டி பழச்சார் விட்டு மைசாக அரைத்து வைத்துக் கொண்டு உச்சி எடுத்து அதில் நடுவாக இரண்டு சாமம் பொருந்த எலுமிச்சம் பழம் தேய்த்து குளிர்ந்த தண்ணீர் விட்டு தலை முழுகவும். இப்படி 5 - நாள் செய்த பிறகு கீழாநெல்லி சமூலம் சூரணித்து சர்க்கரை கலந்து இருநேரம் 3 - நாள் சாப்பிட தீரும்.

எருபற்பம்

காட்டுபாகல் சாத்தில் எரு உமியை எடுத்து பக்குவக் காய்ச்சி வேரே வேரே சாற்றில் தோய்த்து வர வெட்டியாம். நறுக்க உடையும் மேற்படி சாறுவிட்டு அரைத்து வில்லை செய்து காய்ந்த பின்பு மேற்படி இலையை அரைத்து கவசம் செய்து சீலை செய்து கெச புடம் போட பற்பம் அனுபான மறிந்து கொடுக்கவும்.

தாமரை பற்பம்

தாமரை அரப்பொடியை பழுச் சாற்றில் ஊறவைத்து அருகினது வராகனெடை ஒன்று பொடித்த அண்ட ஓடு வராகனெடை 2 இவை இரண்டும் உட்டி கம்மாறு வெற்றிலை சாறு விட்டரைத்து உருட்டி மூசையில் வைத்து மூசை அடக்க ஊதினால் பற்பமாம்.

வீர்ய விருத்திக்கு

நீர்முள்ளி விதை பலம் ஆ, நமம் பலம் 4 இடித்து சூரணம் பண்ணி சர்க்கரை கலந்து வெருகடி அளவு இருநேரமும் மண்டலம் சாப்பிடவும். புளி கூடாது, பெண் கூடாது. ஆகாரம் பால், நெய் முருங்கை பிஞ்சு சாப்பிட்டு வரவும்.

—

வேமன சமுக்கார யோகம்

கீட்டிக்கொடி இலையை சாறு
பிழிந்து துணியில் வடிகட்டி ரசகற்பூரத்தில் இப்படி பாவனை
செய்து தண்டில் சுத்தி வைத்திருந்து பித்தர்களுக்கு
போதிக்க சீக்கிரத்தில் வராது.

பித்தவாய்வு சர்வாங்க வீக்கம் சோகை
காமாலை தீர மருந்து.

எருமை சாணியும், கோமயமும்
பிசைந்து உலர கட்டினது படி ஆ பசுவின் தயிர் படிக்கு.
உப்பு பிசைந்து 3-நாள் குடித்துவரவும். வெந்நீரும்
சாதமும் சாப்பிட்டு வரவும். மருத்தியம் இருக்க
பித்தவாய்வு சர்வாங்க வீக்கம், சோகை, காமாலை
போன்ற நோய்கள் தீரும்.

ரசகற்பூர பற்பம்

7.

கற்றாழைச்சோறு மட்டை
படி 2 சட்டியில் போட்டு அதில் ரசகற்பூரம் பலம்
ஒன்று வைத்து சட்டி மூடி சீலை செய்து நாலு சாமம்
எரிக்க பற்பமாம். தகுந்த வியாதிகளுக்கு அநுபானம்
அறிந்து கொடுக்கவும் தீரும்.

இருமல் கோழைதிர சூரணம்

இம்பூரல் வேரும் அரும்புகளிசியும் அரைத்து அடைதட்டி ஒடுகட்டி வெந்தபாகு தண்டு செய்து காயவைத்து சூரணம் செய்து கற்கண்டு பொடி கலந்து இருநேரமும் சாப்பிடவும். இருமல் கோழை தீரும். கைகண்டது.

கெந்தக சுத்தி

அமுர்தநிலை கெந்தகம்

உவீசை ர இதை முதல் பாச்சகாடி இரண்டாவதுமோர் மூன்றாவது தயிர் 4-வது பால் 5-வது நெய் 6-வது விளக்கெண்ணெய் 7-வது கற்றாழை 8-வது தேன் 9-வது பதச்சாறு இந்த படிக்கி சுத்தி செய்து கற்கண்டு பரங்கி தும்பராட்டகம், செவ்வியம், சுக்கு, திரளை பத்திரி, லவங்கம், சாதிக்காய், லவங்கபட்டை இதுகளை சூரணம் பண்ணி வைத்துக்கொண்டு அநுபானம் தேன், நெய், வெண்ணெய் வியாதிகளுக்கு தக்கபடி சாப்பிட்டு வர சகல வியாதியும் மேகங்களும் கிட்டங்களும், வாய்வு பதைப்பு அக்கினிமந்தம் நீங்கும் உப்பு, புளி தட்டலாம். இச்சாபத்தியம் . . . . . எண்ணெய் தேய்த்து முழுகவும்.

—

ரசபற்பம்

பிளாச்சுருந்து சேர் இடித்து பிழிந்து ரசம் பலம் ஒன்றுக்கு ஊட்டு அரைத்து வில்லை தட்டி காய்ந்த பின்பு அகலில் வைத்து சீலை செய்து குக்குட புடம் போட பற்பமாகும். சகல வியாதிக்கும் அநுபானத்தில் கொடுக்கவும் தீரும். இச்சாபத்தியம்.

நேத்திர வியாதி எல்லாவற்றிற்கு

பூளை மாதுளை பழத்தின் சாறு பிழிந்து இதில் வெள்ளை மாகி இரண்டாய் உடைத்து வீராகண்டை 1 சீரகம் வீராகண்டை 1 . . . குப்பில் வைத்து ஜலம் ஊத்தி நீர் வத்தி பொங்குது வீராகண்டை வ ஆக மூன்றும் மொட்டாய் தவர கட்டி ஊற வைத்து கொண்டு காலை, மதியம், மாலை 3 ரு துளி கண்ணில் இந்திவர அதில் எரிச்சல் புகைச்சல் சிகப்பு இவைகள் தீரும்.

8. ## பவளபற்பம்

பவளத்தை இம்பூரல்வேர் சாற்றில் ஊற வைத்து மேற்படி பட்டையை கவசஞ் செய்து புடம் போட பற்பம். இருமல் சுரம் வாந்தி போன்ற வியாதிகள் தீரும்.

வீரமெழுகு

வீரம் பலம் வ சுத்தி உடைத்து சிறு பொடிகளாய் சட்டியில் வைத்து முருங்கையிலைச் சாறு சுருக்கி கொடுக்க மெழுகாகும். சிறு பயறு அளவு வாழைப் பழத்தில் கொடுக்க உடனே பத்தியச் சோறு அல்லது புது புளிப்பு விட்டு சாப்பிடவும் - 3 - வேளை பிறகு வாலக் கெண்ணெயில் தேய்த்து ஸ்நானம் பண்ணவும். இச்சாபத்தியம் வியாதிகள் எல்லாந் தீரும்.

சூத பஸ்பம்

சூதம் பலம் ஒன்று சட்டியிலிட்டு முதிரா இளநீர்ச்சாறு பலம் 10 விட்டு கரண்டியால் வறுக்க.... அனுபானம் அறிந்து கொடுக்கவும் தீரும்.

கட்டிகள் கரைய

பாலாக்கிச்சாம்பிராணி, கற்பூரம், மயில்துத்தம் ஆக மூன்றும் சம அளவு அரைத்து வெண்ணெய் போட்டு மெழுகு பதமாய் அரைத்து துணியில் தடவ கட்டிகள் மேல் போட கரையும்.

பலம் உண்டாக வீரிய விருத்தி.

அமுக்கிராக்கிழங்கு, எள்ளு, உளுந்து. தண்ணீர்விட்டான் கிழங்கு இதுகளை சூரணம் பண்ணி வெள்ளைச் சாரணைவேர் பசுவின் பாலில் குடிப்பி கொடுக்க யானைக்கொப்ப பல உண்டாகும்.

வீரிய விருத்திக்கு

நாயன்வேர் அரைத்து பாக்கு அளவு உருண்டை செய்து ஒரு உருண்டையை பசுவின் பாலில் கொடுப்ப சாப்பாட்டு வர வீரிய விருத்தியாகும்.

அகத்திவேரை, நீர்முள்ளிவேரை சூரம் மேற்படி பசுவின் பாலில் சாப்பிடவும்.

கொசுகுகிலைச்சாறு - 5 நாளைக்கு ஒரு சிரங்கை சாப்பிட மது சாகும். மார்பு நோவுகீல் வயிறுநொந்தால் தீரும் மது வந்தால் வாகும்.

லிங்ககட்டு

லிங்கம்பலம் ஒன்றுக்கு முலைப்பால் சாமம் குப்பைமேனிச் சாறு படி - வ வெள்ளை வெங்காயம் சாறு படி வ இதில் சாம்பிராணி பலம் கற்பூரம் பலம் ஒன்று பொடி பண்ணிபோட்டு சுருக்கு குடுக்கவும். மணடைச்சாறு படி வ சுருக்கு கொடுக்க நல்ல கட்டாகும். சன்னி சுரங்கள் தீரும்.

எலிகடி 64-க்கு மருந்து.

கொஞ்சிவேர் பட்டையை
பச்சையாய் அரைத்து மிளகு கொஞ்சம் சேர்த்து அரைத்து சுண்டைக்காயளவு 3-நாள் சாப்பிடவும். நாள் சென்றதானால் பின்னையும் ஒரு வேளை சாப்பிட தீரும். பத்து பெல்லா (பாளை) சாதமும் வெந்நீரும் ஆகும்.

9. ## நாள் சுரத்திற்கு மருந்து

கெசக்கா கொழுந்து ஒரு பிடி
கொண்டு வந்து அதில் பலம்ர மிளகு பலம்வ வெள்ளை பூண்டு சேர்த்தரைத்து கொட்டைபாக்கு அளவு உருண்டை செய்து வைத்துக்கொண்டு மேற்படி சுரம் வருகிறது நிற்கும் - 7 நாழிகை முன்னதாக சாப்பிடவும் - 3-வேளை சாப்பிடவும் நின்று விடும்.

தீர்மைமுறை காமேகத்திற்கு எண்ணெய்

மிளகு பலம்ஞு, சேவியம்
பலம்ஞு, சிற்றரத்தைகம் பலம்ஞு, கண்டுபாரங்கி பலம்ஞு, கொத்தமல்லி பலம்-ஞு, சுக்கு பலம்-ஞு, நாரத்தம் இலை பலம் 10, ஊமத்தைகிரந்தி பலம் 10 ஒரு பானையில் போட்டு இருபடி தண்ணீர் ஊற்றி எட்டிலொன்றாய் காய்ச்சி கொள்ளவும்.

கெச்சக்காய் இலைச்சாறு படி ½, கரும்புமனைத்
தக்காளி இலைச்சாறு படி ½ வில்வ இலை ரசம்
படி ½, துளசிரசம் படி ½, கையாந்தகரை ரசம்
படி ½, நாயுருவி ரசம் படி ½, ஆனை
நெருஞ்சில் ரசம் படி ½ சித்தாமணக்கெண்ணெய்
படி க மேற்படி ரசமும் கசாயமும் சேர்த்து ஒரு
நாள் சூரிய புடம் வைத்து மறுநாள் காய்ச்சி
மெழுகு பக்குவத்தில் பலம் 5, வெந்தயம் பலம் 5,
வெள்ளைவெங்காயம் பொடித்துப் போட்டு கலகலப்பு
அடங்கிற தருணம் பார்த்து வடித்துக் கொள்ளவும்.

வாதத்துக்கு

தேள்கொட்டின வாயால்
கோவை இலை ரசத்தை தடவ தேய்த்து பின்பு மேற்படி
இலையை அரைத்து அதின் மேல் பூசி வைக்க தீர்ந்து
ஆகும்.

நிலவேம்பு இலை நாலு, ஐந்து
முறைக்கு வெற்றிலையால் கொடுக்க தீரும்.

பாம்பு வாதத்துக்கு

ஆடுதின்னாப்பாலை
க. 2 பாலை வெற்றிலையால் மடித்து சாப்பிடவும்
வாந்தியுமாகும் பேதியாகும் வாதமும் தீரும். பால்
பச்சரிசியும் பயறும் பொங்கி சாப்பிடவும். நித்திரை வரும்.

நண்டு கொட்டினால்

நல்ல சாரணை இலையை நான்கு ஐந்து சாப்பிட்டால் ஊறலும் தீரும்.

நிலவேம்பு இலையை அப்படியே சாப்பிடவும். ஊறலும் இறங்கும் கைகண்டது.

சிகலவண்டு கடிக்கு

மருதம் பட்டை அல்லது இலையை சூரணம் செய்து சாப்பிட்டு வர தீரும். பத்தியம் இருக்கவும்.

10. ## எலிகடிக்கு

முள் உள்ள கிளிஞ்சி இலையை ஒரு பிடி கொண்டு வந்து கால்பலம் மிளகு கூட்டி நைசாக அரைத்து உருண்டை இரண்டு நேரமும் சாப்பிடவும். மறுநாள் கடும் பத்தியம் மறு பத்தியம் 5-நாள் பொறுத்து 5 நாள் சென்ற பின்னர் இன்னும் 5-நாளைக்கு சாப்பிடவும்.

வெள்ளருக்கு வேரை அரைத்து பசுவின் பாலில் கலந்து 7-நாள் சாப்பிடவும் தீரும்.

—

இரத்த மூலத்திற்கு

வெட்சிப்பூவை அரைத்து பசுவின் பாலிற் கலந்து 7-நாள் சாப்பிடவும் தீரும்.

முளைமூலத்திற்கு

ஊமத்தை இலையை ஒரு பிடி கொண்டது உருவா வாயில் போட்டு மென்று சாப்பிட்டு பிறகு ஆகாரக்கு சுத்த தண்ணீர் குடிக்கவும். 7, 9, 11 நாள் சாப்பிட்டு வரவும். முளைமூலம் கரைந்து விழும். உப்பு, புளி, நெய், பால் சேர்த்து வரவும். அவரை கொள்ளு தின்னவும்.

சகலமாந்தகளுக்கு

நீர்முள்ளிவேர் பட்டையும் ஈரவெங்காயமும் சுட்டு அரைத்து வெண்ணெயில் போட்டு பதமாக வறுத்து கொண்டு வார்க்கவும்.

மாந்தவாய்வுகளுக்கு

கெச்சக்காய் இலைச்சாறு சேர் 2 ஈ.ர வெங்காயச் சாறு சேர் 2 இந்த இரண்டு சாறும் சேர்த்து வறுத்து இறுத்து ரசகற்பூரம் வராகனெடை க சுத்தி செய்த வாலமிளகு வராகனெடை க வ இவை இரண்டும் அரைத்து குப்பா வைத்துக் கொண்டு மாந்தவாய்வு களுக்கு வார்க்கவும் வாயுபக்க நோவு இசிவு கோழை கட்டு விடும்.

வாய்வு பக்கநோவு குழந்தைகளுக்கு இசிவு கோழை கட்டு மாந்தம் தீர

பிரண்டை விதை!, கறியுப்பு சேர்! இவை இரண்டும் இடித்து வாலக்கன்னையை படிக கட்டி பதமாய் காய்ச்சி பாதுத்து வைத்து கொண்டு சாப்பிடவும்.

நவாதிர பற்பம்

நவாதிரம் தண்ணீர்விட்டு போட்டு உருட்டி வெள்ளைச்சாறு வேளை சமூலம் அரைத்து இரண்டு விரல் கனம் கவசம் செய்து சீலை மண் செய்து புடம் போட பற்பமாகும்.

கரும்புள்ளை குட்டம் தீர

நாகமல்லிவேர்ப்பட்டையை பழச்சாறு விட்டரைத்து மேல் தடவி கொண்டு வர தீரும்.

H. வாந்தி அன்னத்தோஷம் பித்தம் கபம் இளை இருமல் சுரம் இவைகள் தீர

கோரைக்கிழங்கு பற்படாகம் பேய்ப்புடல் சுக்கு வகைக்கு பலம் 1 ஆக்கோடு சேர்த்து சட்டியிலிட்டு எட்டிலொரு பங்காய் காய்ச்சி அதை சாயமாக அது மாசத்திய காடி தண்ணீர் கலந்து 2 வேளையும் 7-நாள் சாப்பிட தீரும்.

சகலவாய்வுகளுக்கு நவச்சார பற்பம்

நவச்சாரம் பலம் 1 கல்வத்திலிட்டு ஆதந்தைகை நாகத்தாளி மடலில் உள்சோறு இழைத்து வாங்கியெடுத்து ஊட்டு நாலுசாமம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து மேலேமூடி சமமாய் சீலை 5 - எருவில் புடம் போட்டு பற்பமாம். சகல வாய்வுகளுக்கு அநுபானம் அறிந்து கொடுக்கவும் தீரும். கைகண்டது.

காலையில் நன்றாக மலசுத்தமாக மருந்து

நிலஆவாரை சூரணம் பலம் 1, சுக்கு பலம் - வ, சோம்பு பலம் 1, திராட்சை பலம் 3 கற்கண்டு பலம் 3 இவைகளை நன்றாக அரைத்து லேகியமாய் வைத்துக் கொண்டு ராத்திரிக்கு சாப்பிட்டு படுக்கும்போது கெச்சக்காய் அளவு லேகியம் சாப்பிட்டு படுத்தால் காலையில் பேதியாகும். வயறு சுத்தமாக இருக்கும்.

திமிர்குத்தல் ரணம் நடிப்பு குட்டைகள் கொறங்கது கடி தீர.

உத்தாமணி இலையை பிராய பழந்துணிக்கையில் வைத்து மூடி சுருக்கவும். உடனே

மேற்படி இலையை நான்கு, ஐந்து என்று தின்னவும். இப்படி 20 நாள் தின்று வரவும். இச்சாபத்தியம். இதில் கூறப்பட்டுள்ள நோய்களும் இன்னும் அநேக உபாதிகளை தீரும்.

மேகத்திற்கு கஷாயம்

நிகரைவேரை கொண்டு வந்து இடித்து அடை கஷாயம் வைத்து 5-நாள் இரு வேளையும் சாப்பிட்டு வரவும். இச்சாபத்தியம்.

வெகுமேகங்களுக்கு சருக்காய் தீர மருந்து.

முத்தலை இக்கரை முருங்கை வேர்ப்பட்டையும், மாமரத்து கொழுந்து தோல்ப்பட்டையும் இடித்து சாறு பிழிந்து காலையில் ஒரு கை அளவு சாப்பிடவும் 5, 7 நாள் சாப்பிடவும். வெந்நீரும் சாதமும் பத்தியம். மேகம் சருக்காய் தீரும்.

12. ## சரங்களுக்கு லிங்க கட்டு

லிங்கப்பலம் ஒன்று கட்டியாய் வாங்கிவந்து கற்பூரம் பலம் ஒன்று, சாம்பிராணிபலம் ஒன்று இவை இரண்டும் தூள் செய்து ஒரு ஓட்டில் வைத்து

உருக்கி அதில் லிங்க கட்டியாய் காய வைத்து மூட்டி கொண்டே வரவும். மறுபடியும் தான் போட்டு கொண்டு மூட்டி மூட்டி வருக்க தான் உருகி கருகி போனால் லிங்கத்தை எடுத்து கவசம் வைத்துக் கொண்டு அனுபான மறிந்து கொடுக்கவும்.

12 லிங்க மெழுகு

லிங்கம் பலம் 1 ஒரு கட்டியாய் வாங்கி ஒரு வராகனெடை குன்றுமணி பருப்பு ஒரு வராகனெடை வெள்ளைகாரம் 1 வராகனெடை படிகாரம் இந்த மூன்றையும் உமிழ் நீர் விட்டு அரைத்து லிங்க கட்டிக்கு கவசம் செய்து உலர்த்தி எடுத்துக் கொண்டு ஒரு சட்டியில் ஒரு செந்தாக்கையை வைத்து வறால் செய்து வைத்து அதில் நெய் பலம் 10, தேன் பலம் 10, புளியாரைச் சாறு பலம் 20 இவைகளை கலந்து மேற்படி சட்டியில் விட்டு அதின் நடுவில் அந்த செந்தாக்கைக்குள்ளே கவசம் கட்டின லிங்கத்தை வைத்து எரித்து கொண்டு வந்தால் சாறு சுண்டி தேனும் நெய்யும் எரிந்து போன பின்பு மேற்படி கவசத்தோடு லிங்கத்தை எடுத்து டப்பியில் வைத்து கொள்ளவும். சுரம், சன்னி முதலான வியாதிகளுக்கு அனுபான மறிந்து பயறு அளவு கொடுக்கவும். கண்டது.

கெந்தக பற்பம்

மண்கெந்தகம் ஒரு பலம் ஒரு கட்டியாய் வாங்கி சோணைத்தாமரையை அரைத்து சந்து இல்லாமல் கருகட்டியாய் கவசம் பண்ணி 5, 6 எருவால் புடமிட பற்பமாம். அநுபானமறிந்து கொடுக்கவும்

பேதிக்கு மெழுகு

வாளத்தை தண்ணீர் விட்டு ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் எடுத்து ஓடு நீக்கி உள் நாக்கை எடுத்து மறுபடியும் புளிச்ச காடி தண்ணியிலே ஒரு நாள் ஊறப்போட்டு அதை எடுத்து 8 வராகனிடை-யை விளக்கெண்ணெயால் வறுத்து சித்தாமணக்குமுத்து பருப்பு வராகனிடை 3 சாதிலிங்கம் வராகனிடை 1 வெண்காரம் வராகனிடை 1 ஆக வகை நான்கும் கல்வத்தில் போட்டு விளக்கெண்ணெய் விட்டு அரைத்து மெழுகு பதமாய் பரணியில் வைத்துக் கொண்டு குன்றுமணி அளவு அல்லது இரண்டு மணி அளவு அநுபானத்தில் சாப்பிட பேதியாகும். நல்ல தண்ணி சாப்பிட அதிக பேதியாம். வெந்நீர் சாப்பிட பேதி நிற்கும். சீதங்கண்டால் இளநீரை சுட வைத்து அதில் சாப்பிட்டால் பேதியாகும்.

—

பித்தவாந்திக்கு கஷாயம்

மக்காச்சோள கதிரின் சடையும் பட்டு கந்தையும் கருக்கி சீரகத்தை வெடிக்கவிட்டு தண்ணீர் விட்டு நாலொன்றாய் காய்ச்சி சாப்பிட தீரும்.

சகல மேகங்களுக்கு கருவங்க சூர்ணம்.

கருவங்கத்தை தகடுதட்டி சிறுகீரை அரைத்து கவசங்கட்டி கோழிபுடமிட சூர்ணம்.

அம்மான் பச்சரிசி இலையை கவசங்கட்டி கோழிபுடமிட சூர்ணம்

ரசபற்பம்.

ரசத்தை கல்வத்திலிட்டு சிறு அம்மான பச்சரிசி சாறு விட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து சீலை செய்து கஜபுடமிட பற்பம் அனுபானம் அறிந்து கொடுக்கவும்.

விஷூரணாதி லேகியம்

சுக்கு பலம் 5, மிளகு பலம் 3, தயாளம் பலம் 2 சோம்பு பலம் 1 சுத்திசெய்த கஞ்சா பலம் 7 இவற்றை வறுத்து சூரணித்து பஞ்சதிரகாயம் பண்ணி

பசும்பால் படி 1-யில் சர்க்கரை பலம் 10 பாகுசெய்து சூரணத்தை போட்டு நெய் பலம் 5, தேன் பலம் 5 விட்டு கிளறி கொண்டு நெல்லிக்காய் அளவு சாப்பிடவும். பசி தீபனமுண்டாம். பேயனமுண்டாம் வாயுகளும் பேதியும் நிற்கும். பித்தம் சீதளம் தீரும். பலமுண்டாகும் வயிற்று வலி நிற்கும்.

பித்த வாய்வினால் மார்பு நோவுக்கு வாந்தி தீர நாரத்தம் பழ லேகியம்

சுக்கு பலம் 1, மிளகு பலம் 1 வாய்விளங்கம் பலம் 1, ஏலம் பலம் 1, சீனாவாரை பலம் 1 இவைகளை இடித்து சூரணித்து நாரத்தம் பழ ரசம் படி கால் சர்க்கரை பலம் 5 போட்டு கிளறி பசு நெய் பலம் 4 விட்டு கிளறி வைத்து கொண்டு நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு வந்தால் பித்த வாய்வினால் மார்பு நோவு வாந்தி தீரும்.

மார்பு நோவுக்கு சூரணம்

கொட்டை தில்லை

கடுக்காயை இடித்து சூரணம் பண்ணி வைத்துக்கொண்டு வெந்நீரில் கலக்கி சாப்பிட்டு வந்தால் முன் சொன்ன வியாதிகளும் தீரும். கை கண்டது.

சீதபேதி, ரத்தபேதி, வயாறுநோவு நீங்கும்
பசிஎடுக்கும் இவற்றிற்கு மருந்து

சீரகம்பலம்௨ வெல்ல
சர்க்கரை பலம்-௨, நெய்பலம்௨ இந்தமூன்றும் கலந்து
அரைத்து இருவேளையும் மூன்றுநாள் சாப்பிட தீரும்.
கைகண்டது.

ஆராதார சூரணம்

14.

சோம்புபலம்௨, சீரகம்பலம்௨,
கருஞ்சீரகம்பலம்௨, தாளிசபத்திரிபலம்௨ லவங்கம்
பலம்௨, தனியாபலம்௨, இவைகளை பொன்னிறமாக
வறுத்துக்கொண்டு சூரணம் செய்துகொண்டு கற்கண்டு
பலம் 2 தூள்பண்ணி சேர்த்து வைத்துக்கொண்டு
வெருகடி தூள் இருவேளையும் சாப்பிட்டு வந்தால்
இரத்தமார்பு நோவு நெஞ்சடி கடுத்து நோவுகளை
யெல்லாந்தீரும். கைகண்டது.

படாக கடுத்து நோவுக்கு தலைமுழுக பால்.

கொப்பரைதேங்காயை
அரைத்து பால் பிழிந்து அந்த பாலில் கஸ்தூரிமஞ்சள்
பூலா, மிளகு இவைமூன்றும் கொஞ்சம் போட்டு அரைத்து
பச்சையதானே தலையில் தேய்த்து முழுகிவரவும்.

தலையடிநோவு, மடை, கிசவு, ஜன்னி, தலைபாரம் இவை யெல்லாந்தீரும்.

வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், பாலுக்கிச்சாம்பிராணி, வெள்ளைவெங்காயம், ஜடாமாசி, திலாகி, கஸ்தூரிமஞ்சள் அமுக்கறாசி இவைகளைதூள் பண்ணி எண்ணெயில் போட்டு காய்ச்சி முழுகி வரவும். தீரும் ஆயாதி தலையடி, மடை, கிசவு, ஜன்னி தலைபாரம் தீரும்.

பாம்புகடித்தால் மூலிகை மருந்து

நல்லபாம்புகடித்தால் தும்பை இலையை கசக்கி உள்ளுக்கு கொடுக்கவும். திரும்பவும் விரியன்கடித்தால் மேற்படி இலையை உள்ளுக்கு கொடுத்தால் ரத்தம் கரையும். உடனே தீரும். கை கண்டது.

வேறுமுறை மந்திரம்

ஓம் கசி ஓமசி ஓங்குவே அதற உதற பாம்புகடித்து விஷம் பாணா சோது உருவு 108.

தேள் கொட்டினால்

சுண்ணாம்பு தடவா உரை ஆட்டு மூத்திரமும் தடவ இறங்கும்.

அதிக மாந்த வாய்வானால் மார்நோவு தீர்வதற்கு

சுக்கு, மிளகு, சீரகம், தனியா இவை நான்கும் வகைக்கு பலம் 1 பக்குவமாய் தூள் பண்ணிகொண்டு நன்னாரிவேர் பலம் 2 துண்டு துண்டாக செய்து சட்டியில் வெந்தது வேகாததுமா இருக்கும்போது மேல்படி தூளை கொட்டி இரண்டு நேரம் வறட்டி உடனே 1 படி தண்ணீர் விட்டு ஏ படியாகக் காய்ச்சி அடை கியாழமாக வைத்துக்கொண்டு இருவேளை சாப்பிடவும்.

குன்மம் எட்டுக்கு

நிலவாரை பலம் 5 அஞ்சறை
15: காச்சின் வெடியுப்பு பலம் 5 இவை இரண்டும் கல்வத்தில் போட்டு உத்தாமணிசாறு அல்லது எருக்கன் பால் விட்டு அரைத்து வில்லைதட்டி காயவிட்டு ஓட்டில் மூடி சீலைசெய்து தகுந்த புடம் போடவும் சுண்ணமாகும் குன்மம் எட்டுக்கும் அநுபானமறிந்து கொடுக்கவும்.

—

வெடியுப்பு சுண்ணம்.

ஆலம்பழுப்பு இழுத்து நான்
பண்ணி ஒரு சொறந்தையில் போட்டு பாதியளவு
அதன்மேல் வெடியுப்பை பரப்பி மற்ற பாதிக்கும்
மேற்படி நாரை கொட்டி மேல் அகல்மூடி சீலை
செய்து அடிப்பரப்பில் வைத்து எரிக்க சுண்ணமாகும்.

வாய்வுகள் வாய்கோணல் கைகால் இழுப்பு
வாதப்பு பிடிப்புகள் இதுகளுக்கு

தேங்காய் எண்ணெய்

கிருணமாச்சால முறை காயம் பலம் 2, கருஞ்
சீரகம் பலம் 2, சுண்டு பலம் 4, கடுக்காய் பலம் 4
இந்துப்பு பலம் 2 வெங்காரம் பலம் 2 உகைசீரு
பலம் 2 ஓமம் பலம் 1, திப்பிலி பலம் 2 இவைகளை
எண்ணெய் பலம் 2௫ தேங்காய்பால் படி 5,
சுக்கெல்லாம் நான் பண்ணி மேற்படி எண்ணெயில்
போட்டு தேங்காய் பாலையும் விட்டு அடுப்பில்
காய்ச்சி மெழுகு பதத்தில் எண்ணெய் வடித்து
சாப்பிட்டு வரவும். இச்சா பத்தியம். கைகண்டமுறை

நீர்மையாகுறை அண்டவாய்வு முதல் சகல வாய்வுக்கும் எண்ணெய்.

ஆமணக்கெண்ணெய்படி 1, இளநீர்படி 1, பசும்பால்படி 1, கழற்சிஇலைரசம்படி 1, தாளம்முருங்குசாறுபடி 1, கரும்பு மணத்தக்காளிரசம் படி 1, ஒன்றாக சேர்ந்து அதற்கு கசாயம் நாரத்தம் இலை, ஆவரைஇலை, மிக்கராட்டை, நல்துளசி, சித்திர மூலம், [illegible], மரமஞ்சள், செவ்வியம், மிளகு, திப்பிலி, நெல்லபருப்பு, சன்னராஷ்டகம் இவையெல்லாம் பச்சையாக நறுக்கி இரண்டுபடி தண்ணீர் ஆட்டுகால் படியாக காய்ச்சி இறக்கி முன் சட்டி வைத்து எண்ணெய்

16\. ஆட்டு காய்ச்சி மெழுகு வெந்தயம், வெள்ளைவெங் காயம் பொடிக்குபலம் 5 எண்ணெயில் போட்டு காய்ச்சி வைத்து கொண்டு தினம் வேளைக்கு பலம் உதிரம் சாப்பாடவும். இச்சாமத்தியம் அண்டவாய்வு மேகம், படைதிரும்பு, தடிப்பு, குடைச்சல் முடக்கு இதுகள் எல்லாந்தீரும்.

பசிதீபனம் அதிகமாக மருந்து

இஞ்சிபலம் இரண்டு மெல்லிய தாக சீவி ஒரு பீங்கானில் போட்டு கற்கண்டுபலம் ஒன்று

தூள் செய்து போட்டு ஆய்ந்த சீரகம் பலம் ஒன்று அத்துடன் கூட போட்டு பொருகு பொருகு மூன்று தடவை வறட்டி கொடுக்கவும். மூன்று வாரம் அளவு சாப்பிடவும். காலையில் சாப்பிடவும்.

வேறுமுறை

கதலாபழம் தயாளம் ரசந்தாளிபழத்துடன் உடக சேர்ந்து பிசைந்து பசைய தயாளம் இறங்கும். அந்த பட்டை இடித்து தூள் செய்து மேற்படி பழத்தில் போட்டு பிசைந்து பசைய தயாளம் இறங்கும். மருந்துகளுக்கு சேர்க்கலாம்.

கதலா பற்பம்

கதலாபழத்தை கீறி அதற்குள் பிரண்டை இலையால் ஒரு இலையை வைத்து மூடி கீறி செய்து நான்கு வறட்டியால் புடமிட பற்பமாம். இப்படியே குப்பைமேனி இலையை அரைத்து மேற்படி பழத்தின் மேல் பூசி உள்ளும் கீறி இரண்டு மூன்று இலையை சொருகி மூடி நான்கு வறட்டியால் புடமிட பற்பமாம். அநுபானத்தில் கொடுக்கவும்.

—

கண்டங்கத்திரிலேகியம்

இஞ்சிசாறுபடி ஒன்று, கண்டங் கத்திரிசாறுபடி 1 நொஞ்சிசாறுபடி ஒன்று முள்ளங்கிசாறுபடி 1, எலுமிச்சம்பழச்சாறுபடி ஒன்று, பசுவின் பால்படி 2, பனைவெல்லம் பலம் 8 இவையெல்லாம் அடுப்பேற்றி காய்ச்சி பாகுபதத்தில் திரிகடுகு, சீரகம், வாய்விளங்கம், இலவங்கம், தாளிசபத்திரி வகைக்கு பலம் 1 இடித்து பொடித்து தூவி அதன்நெய்படி ர தேன்படி ர விட்டு கிளறி மெழுகு பதமாய் லேகியம் பண்ணிகொண்டு சாப்பிட்டுவர இதில் தீரும் வியாதி வாய்வு, வாதம், சூலை, அண்டவாயு, இருமல், குன்மம், எரசு இவைகள்தீரும்.

சிந்தாதிரலேகியம்.

ஆறுமாசத்து காடிபடி 10, மாச்சுமோர்படி 10, மாதுளக்குபலம் 1 ஒருபடி தயிரும் மாவோடு போட்டு கொதிக்க வைத்துதிருப்பி என்றாய் காய்ச்சி இறுத்து கொண்டு கையான்சாறு படி 2, இஞ்சிச்சாறுபடி 1, பழச்சாறுபடி 1, நொஞ்சிச் சாறுபடி 1, சிறுகீரை சாறுபடி 1, செருப்படை சாறு

படி ஒன்று செண்பகப்பூச்சாறு படி 1, கீழாநெல்லி
சாறுபடி 1, ஆவாரம்பால்படி 4 பனைவெல்லம்
பலம் 10 இவையெல்லாம் பாகு காய்ச்சி அதில் திரி
கடுகு, ஓமம், திப்பிலி, கோட்டம், மஞ்சள், சீரகம்
மிளகு, ஏலம், கிராம்பு, தாளிசபத்திரி, லவங்கப்பட்டை
ஆனைத்திப்பிலி, வகைக்கு பலம் 1 இவைகளை இடி
வறுப்பாய் சூரணம் செய்து முன்பாகுடன் சேர்த்து
பசுவின் நெய்படி 1, தேன்படி ½ விட்டு கிளறி
லேகியத்தை கழற்சிக்காய் அளவு சாப்பிடவும்
தீரும் வியாதி - பாண்டுரோகம், மந்தாரகட்டை, சுரு
வாய்வு, தாமசோபம், அதிசாரயக்கம், அக்னிமந்தம்,
தேகம் வெளுப்பு, மகோதரம், சோகை, காமாலை,
கிராணி, உப்புசம் இரைச்சல் இவையெல்லாந் தீரும்
பத்தியம் இருக்கவும்.

குமாரி தைலம்.

குமாரிச்சாறு படி 2.

வெள்ளாட்டுப்பால் படி 2, நல்லெண்ணெய்படி 2,
கடுகு, திப்பிலி, மஞ்சள், கோட்டம், சீரகம், அதிமதுரம்
முக்காந்து, ஏலம், பச்சிலை, கிச்சிலி, சூரை, ஜீலம், லவங்க
பத்திரி மேற்படி பட்டை செவ்வல்லிக்கிழங்கு, அக்கரா

காரம், கஸ்தூரி பரகனாடை கெந்தரோகணி செண்பகப்பூ ஆனைதிப்பிலி, மஞ்சிட்டி, சோம்பு, மஞ்சள் வகைக்கு பலம் 5 ஆவரம்பாச் ஊட்டு அரைத்து போட்டு அடுப்பேற்றி கமலாக்கினியாக எரித்து மெழுகு பதத்தில் எண்ணெய் வடி கட்டி சீசாவில் அடைத்து தாளிய படமாக வைத்து முருகுவர பாத்தம், உரட்டை குன்மம், பாண்டு, கிரந்தி வலி, மண்டை இந்து, வெளுப்பு சாரம் பத்தியம் இருக்கவும்.

ஆமலதயிலம்.

ஆலங்சாறு படி 2, பொன்னாங் கண்ணிச்சாறு படி 2, கரிசாலைச்சாறு படி 2, செவ்விளநீர் படி 2, சிறுகீரைச்சாறு படி 2, ஆவாரம்பால் படி 2, நல்லெண்ணெய் படி 3, மதுரம், கோட்டம், ஏலம், கிரோசாணி, பச்சிலை கிச்சிலி, சுவாஜிலம், கஸ்தூரி, மஞ்சள், சீரகம், பத்திரி, ஜாதிக்காய், லவங்கபட்டை நிலவேம்பு, நிலப்பனை, கருஞ்சீரகம், சோம்பு, வால்மிளகு வகைக்கு கழஞ்சு மூன்று ஆவாரம்பால் அரைத்து எண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி கமலாக்கினியாக எரித்து கணக்கு பதம் பண்ணித்தயால முறைப்படி வரவும். இதில் தீரும் வியாதி

18. காசம், பீனசம், காமாலை சிரோ வாயு நேத்திர

வியாதி, பித்தவெட்டை, ரத்தவாச்சல் கண்ணெரிவு கால்எரிச்சல் வியாதி...., கிறாங்கி மண்டைகுத்து காதடைப்பு இன்னும் 8-வகை வியாதிகள் தீரும்.கை கண்டது.

உச்பாண்டக்குழம்.

பூசணிக்காய்ச்சாறு படி 2, தாளாகுதுச்சாறு படி 1, தென்னம்பூச்சாறு படி 1, குமரிச்சாறு படி 1, செவ்வாழைநீர் படி 1, ஆவின் நெய் படி 2 சாதிக்காய், சாபத்திரி, மாசிக்காய், திப்பிலி, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டாத்தி, கற்கடகசிங்கி, மல்லி, கோரோசனை வகைக்கு கழஞ்சு மூன்று வீதம் ஆவின்பால் அரைத்து மேற்படி பால்-2க் கில்லை கரைத்து அடுப்பேற்றி மெழுகுபதத்தில் கற்கண்டு பலம் 2 பொடி செய்து போட்டு இறக்கி வைத்து கொண்டு சாப்பாட்டு வந்தால் இதில் தீரும் வியாதி பிரமேயம், உஷ்ண வாய்வு, எரிகாந்தல் நீர்கட்டு அஸ்திசுரம் தந்திமேகம், கிராணி, எரும்பருக்கி, காமாலை இதுகள் தீரும் இன்னும் அநேக வியாதிகள் தீரும் கைகண்டது - பத்திய பக்குவம்.

மாந்தத்துக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய்ப்படி 1,
வெள்ளாண்டு, உசிலம்பட்டை, அருகு, மஞ்சள், வெள்ளுள்ளி, நிம்பக்காயளவு அரைத்து எண்ணெயில் கரைத்து பேய்த்துமட்டிக்காய் பாதி நறுக்கிப் போட்டு காய்ச்சி சிவந்த பதத்தில் இறக்கி கால்சேர் வீதம் மூன்று நாள் கொடுக்க மாந்தம் எல்லாந் தீரும்.

மேகத்திற்கு எண்ணெய்

கோவை, பொன்னாங்காணி,
பிள்ளாரை, செருப்படை, ஆனைநெருஞ்சி, சீந்தில்தண்டு சாறு, அரசம்பட்டை சாறு அத்திதோல்சாறு இவைகள் வகைக்குப்படி 1 ஆமணக்கெண்ணெய்படி த எள்ளெண்ணெய்படி த மேற்படி சாந்தில்வட் 6 சாதிக்காய், சாபத்திரி, மாசிக்காய், கற்கடகசிங்கி செண்பகப்பூ காட்டத்திப்பூ, சிறுநாகப்பூ, கோரோ-சனை, இவம் வகைக்கு கழஞ்சு 2 ஆவாள்பால் ஊட்டரைத்து எண்ணெயில் கரைத்து சித்திரமூல வேர்பட்டை பலம் 1 அரைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் கற்கண்டு பலம் 2 போட்டு தினம் வேளைக்கு ஒரு கரண்டி சாப்பிட வெள்ளைபுண், அரையாப்பு, கிரந்தி, மேகம் தீரும்.

19. கெற்பம் உண்டாக மிகுதி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய் படி 1, பசும்நெய்படி 1, உமத்தைசாறுபடி 2 திரிகடுகு, ஜம்பு ஜா.பூள்ளி, கோட்டம், லவங்கம், வெள்ளுள்ளி, இவைக்கு பலம் 1 ஆவின்பால் அரைத்து எண்ணெய் கரைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கிவைத்து கொண்டு மூன்றுநாள் கழிந்த விதமாக கொடுத்து வர கெற்பம் உண்டாம்.

மேகத்திற்கு எண்ணெய்

நல்லெண்ணெய் படி ஒன்று முசல்வேர் படி 2 ஆவின் பாலில் அரைத்து அடுப்பேற்றி மெழுகு பதத்தில் இறக்கி சாப்பாட்டு வரவும். வாய்க்கிருந்து கிரந்தி, குடல்புத்து, அஸ்திரணம், உள்மூல், தண்டு மாலை, கானரணம், குட்டம் சகலவாய்வும் மேக வாய்வும் தீரும். பத்தியம் இருக்கவும் ஏக கண்டு. உப்பு, புளி ஆகாது மறுபத்தியம் இருக்கவும்.

அக்கிராண சூரணம்.

சுண்டைவேர், தூண்டுவேர், கிராம்பை பூண்டாக்கு இவைகளை சூரணம் பண்ணி நெய்யில் அக்கிராணக்க மந்தம் ௩௦- போகும்.

ரத்த விளைக்கு சூரணம்.

அதிமதுரம், கோட்டம், திரிகடுகு, நறுக்குமூலம், நெல்லிதோல், சடாமாஞ்சில், பச்சைகற்பூரம், மிலாக்கா சந்தனம், கிராம்பு, தாளிசபத்திரி, சீரகம், ஏலம் வகைக்கு பலம் 1 சூரணித்து இதற்கு நிகர் சர்க்கரை சேர்த்து 20- நாள் கொள்ளவும். தீரும் ஓயாத ரத்த பயித்தியம், எரிவு, அசைச்சல், கண் எரிவு, கால் கை எரிவு வயிறுபத்தல், மயக்கம், அன்னதிரேஷம், வெள்ளு பிராந்தி போன்ற நோய்கள் தீரும். கை கண்டது.

சூதக வாய்வுக்கு லேகியம்

கடுகுரோகணி பலம் 1, மரு ரோகணி பலம் 1, கடுக்காய் பலம் 2, கார்போகரிசி பலம் 2, வெப்பாலை அரிசி பலம் 2 கொத்தமல்லி பலம் 4 குரோசாணி பலம் 2 நீரடிமுத்து பலம் 4 இவற்றையெல்லாம் சூரணித்து இதற்கு நிகர் சர்க்கரை சேர்த்து பாகு காய்ச்சி சூரணம் போட்டு நெய் விட்டு லேகியம் செய்து சாப்பிட்டு வரவும். சூதக வாய்வு தீரும். கை கண்டது.

அகத்தியர் குழம்பு

கோவையிலை, பொன்னாங்
காணி, வல்லாரை, செருப்படை, முங்கம்பட்டை, விலாக்
கொன்னைப் படி 1 சூண்டு பலம் 7 மூங்கில் கொழுந்து
பலம் 7 வசம்பு பலம் 7 மேல்நெல்லிவேர் பலம் 2
வெள்ளைக்காக்கட்டான் வேர் பலம் 5, வாசனையில்லா
துளசி பலம் 2 வெப்பாலையரிசி பலம் 5 ஆமக்கலை
பாளிச்சகாடி ஊட்டு காய்ச்சி சுக்கெல்லாம் போட்டு காய்ச்சி
வைத்து கொள்ளவும்.

கிடிமருந்து

அரிதாரம், கெந்தி, ரசம்
காந்தம், துருசு, துத்தம், இந்துப்பு, என், எட்டு வாதை
சேராங்கொட்டை, சித்திரமூலம், மஞ்சள் கருஞ்சீரகம்
ஓமம், மாசிக்காய், சாதிக்காய், வசம்பு, வெங்காயம்,
கொள்ளு கோட்டம், கார்போகசை. அமுக்கிராங்கிழங்கு
கோழிமுட்டை வகைக்கு வராகனெடை 1. சுக்கு, மிளகு
திப்பிலி, லிங்கம், நாபி, வெங்காரம், கெந்தகம்
சமன் கூட்டி எலுமிச்சம்பழச்சாறு ஊட்டு அரைத்து
பயறு அளவு உருண்டை பண்ணி சுரத்துக்கு அனு
பானமறிந்து கஷாயத்திலாவது கொடுக்கவும் தீரும்.

உப்பு வகை பற்பம்

பொட்டிலுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, நவச்சாரம், சுயாந்தயுப்பு வகைக்கு பலம் 1 ஆக பலம் 7 இந்த 7- சரக்கும் பழச்சாறு விட்டரைத்து புது சட்டியில் போட்டு எரிக்க பற்பமாம். வாய்வு, உஷ்ணபேதி, வயிறு நோவு இவைகள் தீரும்.

நீலமயர் பற்பம்

நீலமயர் வேண்டிய மட்டும் எடுத்து கரிசலாங்கண்ணிச்சாறு விட்டு குடுவையில் அடைத்துவிட்டு ஊறவைத்து வாய்மூடி சீலைமண் செய்து புடம் போட பற்பமாகும் இதை சூதகம் வளர்ந்தவர்களுக்கு அநுபானத்தில் கொடுக்கவும்.

நேத்திர வாய்வுக்கு

துருசு வராகனெடை 5 வங்காள பச்சை வராகனெடை 4, சங்கு வராகனெடை 2, பலகறை வராகனெடை 2 இந்த நாலும் பழச்சாறு விட்டு 3 சாமம் அரைத்து மாத்திரை உளு அளவு உருட்டி வைத்து கொள்ளவும்.

கலிக்கம் போடுகிறமுறை

அ.

கற்கடகசிங்கி, பாப்பாரமுள்ளி உத்தாமணிவேர், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளை உரைத்து 13-வகை சன்னிக்கும் கலிக்கம் போடலாம்.

சயந்தலவணம், முங்கம்பருப்பு மேற்படி கொழுந்து இவைகளை பசுவின் கோமயம் விட்டரைத்து சாறுவேளை சாத்திடவும். சன்னி தோஷம் தீரும்.

சுக்கு, மிளகு நெல்லிபருப்பு, முங்கம்பருப்பு, மயில்துத்தம் இவைகளை காசலாங் கண்ணிச்சாறு சாத்தில் அரைத்து உலர்த்தி சாறு வேளை சாத்தியுரைத்து கலிக்கம் போடவும்.

சித்தாமணிக்கு ஊமத்தை சயந்த லவணம் மிளகு ...... பசுவின் கோமயத்தில் அரைத்து மாத்திரை செய்து பசுச் சாத்திலுரைத்து போடவும். மேற்படி மாத்திரையை பொடி செய்து கொடுக்கவும். காச்சலுக்கு மோரில் கொடுக்கவும். உத்தாமணிக் கோமயத்தில் கொடுக்கவும். பேதிக்கு கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் பொடி செய்து கொண்டு மேற்படி உருண்டை கலந்து கொடுக்கவும். கபச்சுரத்துக்கு முசுமுசுக்கை சாத்தில் கொடுக்கவும். சுரா காலமும் ராத்திரிக்கு ஒரு உருண்டை

குப்பை — குறி மேனியிலும்: ஈ

பாய்வுகளுக்கு எண்ணெய்

வேப்பம், துளசி, கொச்சக்காய் இலை, கருப்பு மணத்தக்காளி, நுணா, கல்யாண முருக்கன் கையாந்தகரை, துமட்டிக்காய் வகைக்கு சுக்குபடி பிழி ரசம் சேர்த்து இந்த எடைக்கு வகைக்கு எண்ணெய் விட்டு அதிமதுரம் பறங்கிச்சக்கை, திப்பிலி, செவ்வியம் வகைக்கு பலம் ௨ அந்தயம் பலம் 1, வெள்ளைவெங்காயம் பலம் 1 போட்டு எண்ணெய் மெழுகு பதமாய் காய்ச்சி தினம் இருகரண்டி வீதம் சாப்பிடவும். கை கண்டது.

நீர்பேதிக்கு

மாதுளங்காய், இந்துப்பு, சுக்கு, திப்பிலி சரி எடையாய் உலர்த்தி சூரணம் பண்ணி இதை வெந்நீரில் இரண்டு வேளையும் சாப்பிடவும். [illegible]

கோரக்கா லேகியம்

சாதிக்காய் பலம் ஒன்று சாதிபத்திரி பலம் ஒன்று, அதிமதுரம் பலம் ஒன்று, அக்கிரா காரம் பலம் ஒன்று, லவங்கம் பலம் ஒன்று, கோட்டம் பலம் ஒன்று, மரமஞ்சள் பலம் ஒன்று அபினி பலம் ஒன்று, சாரப்பருப்பு

பலம் ஒன்று, சுக்கு பலம் 1, கோரக்கர்மூலி பலம் 10, சர்க்கரை பலம் 10, பசும்பால் படி ஒன்று, நெய்சேர் 3 உந்து பலம் 13 பாகு சேர்த்து லேகியம் செய்து பதமாய் லேகியம் செய்து வைத்துக் கொள்ளவும்.

மேக ஊறலுக்கு எண்ணெய்

கரிகருணை, பிடிகருணை, நிலப்பனைக்கிழங்கு, மெருகன்கிழங்கு, நாகுவேலை, சிவனார்வேம்பு, கண்டங்கத்திரி, ஆடுதின்னாப்பாளை வகைக்கு பலம் 2 எருக்கலை, நிலா ஆவாரை, வெள்ளறுகு, புன்குருவேலை இந்த ரசமெல்லாம் வகைக்கு பலம் 5 இலக்கெண்ணெய் படி 1 கோட்டம், அதிமதுரம், அக்கராகாரம், கோரைக்கிழங்கு, வசம்பு, கார்போக அரிசி, வெப்பாலை அரிசி, வாய்விளங்கம், சுக்கு கடுகு, ரோகணி வகைக்கு வராகனிடை கல்கம் போட்டு எண்ணெயை காய்ச்சி வடித்து கொள்ளவும். இச்சாபத்தியம்.

பெருங்குரும்பு

உரைக்கிறேன் பெருங்குரும்பை
உண்மைகேள் புலத்தியனே
மறைக்காது சூதஞ் செந்தி
மறைநெறி யாவதும் நாடி
நிறைக்கொடு நாரம் லிங்கம்
நேர்மனோ சிலையுங் காயம்
அரைப்பது அசும தாளகம்
ஆணவற சாந்தம் தானே
1

காரமா லவங்கம் ஏலம்
களிறு கடுகிந் தும்பு
வாரமா கடுகு சுண்டும்
துணையுடன் காந்தோல் வர்த்து
சாரமாம் கடுக்காய் நெல்லி
தான்கருஞ் சீரகம் தாட்சி
பாரமாய் கடுகு ரோகணி
பாவினை காஞ்சி துராங்கே
2

கொள்வாயிநீ சரக்கதனை சுத்தி செய்து
குறைமருந்து யாவர்க்கும் பொறுத்துக் கொண்டு
தன்னாமல் துளைமது இடு போக்கி
சுந்தரமக முனையின் சாரவாய் தன்னி
உள்ளதை நவசுத்தி செய்து கொண்டு
உண்மைகவே மருந்துக்கு அளவாய் சேர்த்து
அன்னமல் பாதிதனை வைத்து கொண்டு
அடவாக பிசைந்து பாரி தேக

இரண்டு சாமம் அரைத்து மிளகு அளவு உருண்டை பண்ணி வாத சுரத்துக்கு இஞ்சியில் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு பஞ்ச மூலத்தில் கொடுக்கவும். சிலேத்தும சுரத்துக்கு முருங்கை பட்டை ரசத்தில் கொடுக்கவும். சன்னி தோஷத்துக்கு இஞ்சி, திப்பிலி, லவங்கம், தாளிசபத்திரி, சாதிபத்திரி இவைகளை வறுத்து பொடி பண்ணி தேன் ஊற்றி கொடுக்கவும். சூலைக்கு கொடி வேலியில் கொடுக்கவும். குன்மத்துக்கு சங்கநீரில் காசத்துக்கு தேங்காய் நீரில் கொடுக்கவும். வாய்வுக்கு கின்னி ரசத்தில் கொடுக்கவும். சயத்துக்கு கூஷ்பாண்ட லேகியத்தில் கொடுக்கவும். புண்ணுக்கு பரங்கிச்சக்கை லேகியத்தில் கொடுக்கவும். குடல் பிரட்டு குத்துக்காறு கரத்துக்கு நிலவாகை கஷாயத்தில் பாக்கெயறு அளவு கொடுக்கவும். மின்பு பேய்ப்பீர்க்கன் சாற்றில் ஒரு கண்ணில் போடவும். இந்திரியமட கருகிறவோர் சீரக கஷாயம் சேர்த்த தேன் கற்கண்டு, ஆவின்பால் ஆகும்.

ஆக்ரோச்சி காதுக்கு

மூசுமுசுக்கை கொண்டுவந்து துணியில் அருந்த சுருட்டி பசுவின் சாணியில் கவசம் கட்டி புடமிட்டு எடுத்து ரசம் பிழிந்து

அந்த ரசத்தில் திப்பிலி, தேசாவரம், மிளகு, சுக்கு, நாக பத்திரி, லவங்கம், சீரகம், கோரோசனை, இஞ்சிப்பூ இவையெல்லாம் நெய்யில் சுட்டு மைபோல் அரைத்து மருந்து முசுமுசுக்கை ரசத்தில் இரும்பா காலையில் கொடுக்கவும். சாயந்திரத்துக்கு முசுமுசுக்கை வேர் நறுக்கி சட்டியில் போட்டு பொன் வறுப்பாய் வறுத்து இரசம் பொறிய ஊட்டு கஷாயம் வைத்து கொடுக்க தீரும்.

முருங்கைவேர்க்கு ஒரு பிடி கொண்டு

வந்து கொண்டை அரைத்து போட்டு ஊட்டு வைத்து வேர்கள் தூளாய் நறுக்கி சட்டியில் பொன் வறுவலாய் வறுத்து இரசத்தை வடிக்க ஊட்டு கஷாயம் வைத்து கொடுக்க தீரும்.

நாவற்பழம் மாங்காய் துவையலை

கொண்டுவந்து புளி உப்பு போட்டு தாளிதம் பண்ணி சாப்பிடவும் தீரும். அரோசிகம் நீங்கும்.

செம்பரத்தை மொட்டு பொரித்து

அந்த பொரியலை அருந்த பாயசம் பண்ணி சாப்பிட தீரும்

வெள்ளை பூண்டை சேகரித்து

மிளகு, மஞ்சள், புளி, சர்க்கரை போட்டு நெய்ப் பண்ணி அதை சாதத்தில் சாப்பிட அரோசிகம் தீரும்.

மாங்கொழுந்து கொண்டுவந்து பொடியாய் அரிஞ்சு அரைத்து சாப்பிடவும். அரோசிகம் தீரும். கை கண்டது.

எம்பெரும்பட்ட இருமலுக்கு

வெள்ளமரமதண்டுவேர் பட்டையை முசுமுசுக்கை ரசத்தில் ஊற வைத்து அதை எடுத்து வைத்து கொண்டு பாக்கு வெற்றிலையுடன் போட்டு கொண்டு ரச சக்கையை முழுங்க இருமல் நிற்கும்.

அக்கார காரம் பொடித்து வாயில் அடக்கி கொண்டால் நிற்கும்.

சின்னாட்டிமகம் நறுக்கி வாயில் அடக்கி கொள்ள நிற்கும்.

மிளகு, முருங்கீர்க்கையும் மென்று வாயில் அடக்கி கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய் முழுங்க நிற்கும்.

உயருவரம்மலுக்கு வாய் மடிப்புக்கு

நாய்வேளை சமூலம் கொண்டு வந்து காயும் இலையும் தள்ள போட்டு நன்றாய் நறுக்கி ஒரு பட்டியில் வேக வைத்து காலையில் அந்த ரசத்தில் மிளகு பத்தாம் தூண்டு புளி உப்பு கட்டு ரசம் பண்ண தூண்டு ஊறுக்கு போட்டு வாளக்கெண்ணெயில் உட்டு தாளித்து

சாப்பிடவும். நாவலாம் இலையும் இந்த மாதிரம் பண்ணி சாப்பிட நீர் வாய்வு தீரும். கை கண்டது.

மாதுளை இலையை வதக்கி அடைபோல் சுட சுட தொப்புளின் மேல் வைத்து கட்டவும். வயிறு உப்பல் வாங்கும். வாய்வு தீரும்.

நீர்க்கடுப்பு ரத்தம் வருவதுக்கு

பச்சரிசி சாதம் சமைத்து அடை தட்டி தொப்புளின் வைத்து கட்டவும். நீர்க்கடுப்பு சுருக்கு நீங்கும்.

இருமலுக்கு

தாளி இலையை கொண்டு வந்து அரிசியை சேர்த்தரைத்து கொண்டு சாப்பிட்டால் இருமல் நிற்கும்.

சயத்தாலே இருமலுக்கு தான்றிக்காய் ஓமம், சீரகம் திப்பிலி, சர்க்கரை கூட்டி சாப்பிடவும் நிற்கும்.

சங்கன் இலையை கொண்டு வந்து மிளகு, சுக்கும் வைத்து அரைத்து தேனில் பாக சாப்பிட நிற்கும்.

தூதுவளை இலை, கொவ்வை இலை கண்டங்கத்திரி இலை, பாப்பாரமுள்ளியை

மாசிபத்ரி, முசுமுசுக்கை இலைகளை போட்டுவைத்து அந்த ரசத்தில் பூந்த ரசக் கொட்டையை உரைத்து நசுக்கி கொடுக்க இருமல் தீரும்.

மாந்தத்தினாலே வாந்தி எடுக்கிறதுக்கு

நாரவாளம் இலை, சீரகம்.

சாதிக்காய் மதுரசம் மேற்படி சாறையும் கூட போட்டு அரைத்து கொடுக்கவும் தீரும்.

இரண்டு அச்சரத்துக்கு

முசுமுசுக்கை இலைச்சாறு

வேறு நன்றாய் பஞ்சு போலே நசுக்கி வாணக்கெண்ணெயில் போட்டு காய்ச்சவும். குங்குமப்பூ, கோரோசனம், வசம்பு மூன்று இதுகள் போட்டு காய்ச்சி வைத்து கொண்டு பெருந்தகளுக்கு பார்க்கவும்.

பிசுகெந்த வாய்க்கு கோஷ்டம் துவரம்

கோஷ்டம், வெப்பெண்ணெய், வெள்ளைபூண்டு, தயாலம் கஸ்தூரி, இவற்றை பொடித்து நக்க போட்டு தேனுக்கு பதமாக கொடுக்கவும்.

அமுக்கிராக்கிழங்கு லேகியம்

முசுமுசுக்கைவேர், அமுக்கிரா கிழங்கு இவை இரண்டும் பாலில் வேகவைத்து உலர்த்தி சுக்குசேர் 2 ஆக இடித்து வஸ்திரகாயம் பண்ணி இத்துடன் சேரு மருந்துகள் சுக்குபலம் 2, மிளகுபலம் 2 திப்பிலிபலம் 2, சாதிக்காய்பலம் 2, சாபத்திரிபலம் 2 அக்கராகாரம் பலம் 2, கோட்டம் பலம் 2, கடுக்காய் பலம் 2, தான்றிக்காய்பலம் 2, நெல்லிபருப்பு பலம் 1 திப்பிலிமூலம் பலம் 1, கண்டுபாரங்கிபலம் 1, பரங்கி பட்டைபலம் 1, தாளிசபத்திரிபலம் 1, குரோசாணி பலம் 2, இலிங்கமய்பூ வராகனெடை 1 கோரோசனை வராகனெடை 2, திராட்சைபலம் 1, இந்துபலம் 1 கார்ஞ்சீர பலம் 2, ஏலம்பலம் 1, சடாமாஞ்சில் பலம் 1 இலவங்கபட்டை பலம் 2, இலவங்கபத்திரி பலம் 2, அதி மதுரம் பலம் 1 இசக்கோல்விதை பலம் 1, சீரகம் பலம் 2, தனியா பலம் 2 ஆக பலகை மொத்த எடைக்கு சர்க்கரை சமமாக கூட்டி பாகுசெய்து கிளறி தேன் சேர் 2, நெய் சேர் 2, கூட்டு கிளறி லேகிய பதத்தில் எடுத்துவைத்து கொண்டு சாப்பிட்டு வரவும். சகல வாயு சகல பித்தம் தீரும்.

சீரகலேகியம்

சீரகம் பலம் 2, தனியா பலம் 2, லவங்கம் பலம் 1, இசுகோல்வாத பலம் 1, வால்மிளகு பலம் 1, கருஞ்சீரகம் பலம் 1 ஆக பலம் 8-க்கும் சர்க்கரை பலம் 8 பாகு சேர்த்து முன் சூரணத்தை கொட்டி தேன் சேர் 2, நெய் சேர் 2 விட்டு கிளறி சாப்பிட்டு வரவும். பித்தத்தால் சேர்ந்ததெல்லாந் தீரும்.

பேய்மரட்டிலேகியம்

நெட்டை பேய்மரட்டி, ஆடாதோடை, கரும்பு சூனைகாஞ்சொறி இலை மூன்றுபலம் பானையில் போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து ஒரு படியாக காய்ச்சி அதில் சேருகை மருந்து திப்பிலி பலம் 1, திப்பிலிமூலம் பலம் 1, கோட்டம் பலம் 1, செவியம், வாய்விளங்கம், சிறுநாகப்பூ, சிறுலவங்கபட்டை, சுக்கு, மிளகு, தாளிசபத்திரி, தும்பராட்டகம் ஆக வகை 11-க்கு சர்க்கரை பலம் 11 முன் கசாயத்தில் விட்டு பாகு செய்து அதில் முன் சூரணத்தை கொட்டி நெய் பலம் 7 தேன் பலம் 11 விட்டு லேகியம் செய்து சாப்பிட்டு வரவும்.

சித்தரத்தை லேகியம்

சித்தரத்தை பலம் 1, மிளகு பலம் 1, தாளிசபத்திரி பலம் 1, லவங்கம் பலம் 1, இவை நான்கும் சூரணம் பண்ணி தேனில் கலந்து லேகியமாய் சாப்பிட்டு வரவும்.

அரோசகத்துக்கு

பழம், சம்பா நெல்லு, கிறு பருத்திக்கொட்டை, ஏலம், வால்மிளகு, சீரகம் இந்த அஞ்சும் லேகியமாய் கிளறி சாப்பிட்டு வரவும்.

நெல்லிமுள்ளி திப்பிலி, நெல்பொரி இவற்றில் சர்க்கரை தேன் போட்டு கிளறி சாப்பிடவும் இருமல் தீரும்.

இருமலுக்கு சூரணம்.

ரா.

ஏலம் வராகனெடை 1, கிராம்பு வராகனெடை 1, தாளிசபத்திரி வராகனெடை 1, திப்பிலிமூலம் வராகனெடை 1, சுக்கு வராகனெடை 1, மிளகு வராகனெடை அரத்தை வராகனெடை 1, செவ்வியம் வராகனெடை 1 சிறுதேக்கு வராகனெடை 1, கடுக்காய் வராகனெடை 1, திப்பிலி வராகனெடை 10, சர்க்கரை வராகனெடை 20 சூரணம் செய்து கலந்து சாப்பிடவும்.

சூரணம்

சுக்கு பலம் 1, திப்பிலி பலம் 1, ஏலம் பலம் 1, கோகுமெல்லி பலம் 1, அதிரம் பலம் 1, குறை நீரு பலம் 1, பேரிச்சன் பலம் 1, திராட்சை பலம் 1, சாதிக்காய் பலம் ½, லவங்கம் பலம் ½, வால்மிளகு பலம் ½, லவங்கப்பட்டை பலம் ½, கோட்டம் பலம் ½, சீரகம் பலம் ½, நெல்முள்ளி பலம் ½, சிறுநாகப்பூ பலம் ½, சந்தன கட்டை பலம் ½, நெல்லிப்பருப்பு பலம் ½, வெட்டிவேர் பலம் ½, லாமிச்சம் வேர் பலம் ½, கோரைக்கிழங்கு பலம் ½, நன்னாரிவேர் பலம் ½, அத்தி பலம் ½, ஆவாரம்பூ நுகாம்பு பலம் ½ சர்க்கரை பலம் 16 இவையெல்லாம் இடித்து வஸ்திரகாயம் பண்ணி சர்க்கரை கூட்டி ஒரு கரண்டி அளவு தேன், நெய் பசும்பால் இவற்றில் ஏதாவதொன்றில் சாப்பிட்டு வரவும். ரத்தபித்தம், மேற்படி வாந்தி, எக்கிறை மூத்திரம், உடம்பு, அக்னி கால்கையெரிவு, நெஞ்செரிவு, தாகம் அனேக வியாதி தீரும்.

பாரிசவாய்வுக்கு

வேப்பன்முத்து புண்ணாக்கு தயிலம், மூண்டு தயிலம், காயம் பலம் 1, திப்பிலி பலம் 1, மிளகு பலம் 1, லவங்கம் பலம் 1, கடுகுரோகணி பலம் 1 இவைகளை எல்லாம் மேற்படி தயிலத்தில் பொடி பண்ணி போட்டு கொண்டு வெளைக்கி ஒரு பலம் சாப்பிடவும்.

நவநீத பற்பம்

வெண்ணெயை சட்டியில் போட்டு நன்றாய் திரண்டபின்பு எடுத்து துணிகட்டி பிழிந்து உருட்டி எடுத்து கொண்டு சிறு தக்காளி இலையை அரைத்து கொண்டு கவசம் செய்து சீலைசெய்து 3 வரட்டியால் புடம் போட பற்பமாம்.

திருவண்ணாமலை பரதேசி முறை
லிங்கக்கட்டு செந்தூரம்
சகல வியாதிக்கும்.

ஆகாசத்தாமரையை அரைத்து லிங்கம் ஒரு பலம் ஒரு கட்டிக்கு கவசம் செய்து மண் சீலைசெய்து குரு புடத்தில் கட்டி செந்தூரமாம். சன்னிதோசம் முதலானதுக்கும் கொடுக்கலாம். கைகண்டது.

நாக பற்பம்

தேன் கொடுக்கின் இலையை ரசம் பிழிந்து கொண்டு நாகத்திற்கு ஊட்டு அரைத்து ஊற்றி தட்டி காய வாட்டு மேற்படி இலையை அரைத்து ஊற்றி கவசம் செய்து சீலை பண்ணி காடை புடம் போட பற்பமாம்.

தாம்பர பற்பம்

ஒரு வருடத்து பனைமரம் பொந்தில் முளைத்திருக்கும் அச்சுருவாக் கொண்டுவந்து அரைத்து தாம்பரத்துக்கு கவசம் பண்ணி தகுந்த புடமிட பற்பமாம்.

வெள்வங்க பற்பம்

கம்மாறு வெற்றிலை 50 அடுக்கி அதின்மேல் வெள்வங்க தகடு மெல்லியதாக தட்டி வைத்து மேலும் 50 வெற்றிலை அடுக்கி பரைசுந்து கட்டி சீலைசெய்து கோழிபுடமிட பற்பமாம அநுபானத்தில் கொடுக்கவும்.

கரிவங்க பற்பம்

சிறியாநங்கை பெரியா நங்கை கொண்டுவந்து அரைத்து வில்லைசெய்து ஒரு வில்லைமேல் கரிவங்க தகடு மெல்லியதாய் தட்டிவைத்து மேலும் வில்லை மூடி சீலை செய்து கோழிபுடமிட பற்பமாம் காமேகம் போம்

திருவண்ணாமலை பரதேசி சொன்ன செந்தூரம்.

முத்திரை தேங்காய் சுன்று

உரித்து துவாரம் கண்ணை திறந்து தண்ணீரை ஊற்றிவிட்டு அதற்குள் சதுரகள்ளிபால் படி ரூ படி விட்டு அத்துடன் ரசம் பலம் ர விட்டு மேல்

21. துவாரத்தை களி மண்ணால் மூடி தேங்காய் முழுதும் சாணியை அரைத்து கவசம் செய்து 16 நாளைக்கு காய வைத்து பின்பு எடுத்து முழு உபலம் புடம் போட்டு .... இருந்து பார்த்து முதல் நீல புகை இரண்டாவது கரும்புகை மூன்றாவது மஞ்சள் புகை வருகிற போது மேற்படி புடத்தை கலைத்து எடுத்து கொண்டு தேங்காயை உடைத்து பார்க்க ரசம் திரண்டு கட்டி இருக்கும். மேற்படி தேங்காயை புதைத்து போடவும். மேற்படி ரசக்கட்டியை சிறு துமட்டி இலையை அரைத்து கவசம் செய்து புடம் போட செந்தூரமாகும். அநுபானமறிந்து கொடுக்கவும்.

உப்புகட்டு மர்மம்

பின்னைபட்டையை - ர

தூக்கி கொண்டு வந்து நைய இடித்து சட்டுள் கலமாய்

பரப்பி அதின் மேல் கறிஉப்பு பலம் 1, இந்துப்பு பலம் 1 கலந்து தூளாக்கி வைத்து மேல்பட்டை தூள் பரப்பி சீலைசெய்து 50- வராட்டியில் புடம் போட உருகி மணி போல் நிற்கும். அதை எடுத்து தூள் பண்ணி வைத்து கொண்டு வாய்வு சூந்தம் வயிறுநோவு இவைகளுக்கு கொடுக்கலாம்.

வெடியுப்பு சுண்ணம்

ஆகாச தாமரை இலையை அரைத்து ஓட்டில் கனமாய் வில்லை தட்டி அதின் மேல் வெடியுப்பு பலம் ஒன்று வைத்து மேலும் இந்த வில்லையை வைத்து ஓடுமூடி சீலைசெய்து கஜபுடம் போட உருகி சுண்ணமாம் வாய்வு குன்மம் தீரும்.

திருவண்ணாமலை பரதேசிமுறை
கதலிபஸ்பம்.

பிரண்டையை அரைத்து அதற்குள் கதலிபழத்தை உரித்து மாசகற்று உருட்டி வைத்து மேற்படி பிரண்டையால் மூடி சீலைமண் செய்து கோழிபுடமிட பஸ்பமாம் சாப்பிட்டால் நீரேற்றம் வாங்கும்.

—

நவநீத பற்பம்

நவநீதம் பலம் 2 படிகாரம்
பலம் 7, தாள் பண்ணி போட்டு மறைத்து உடுப்பு
குறட்டை பாலை அரைத்து கவசம் பண்ணி
உலர்த்தி குக்குட புடம் போட பற்பமாம் இடை
நிற்கும் சாப்பாட ~~[illegible]~~ வெள்ளை சருக்கு
சூடு குத்தல் அனாற்றி அனுபானத்தால் கொடுக்கவும்.

சங்கு பற்பம்

30.

சங்கு பலம் 2 உத்தாமணி
இலையும் பாலையும் இடித்து கவசம் பண்ணி குக்கிடபுடம்
போடவும். மேகல் ஒரு மருவு வைக்கவும். பற்பமாம்.
பக்கசூலை வாய்வுகளும் இருமல் நிற்கும்.

அரோசனதைலம். நாக்கு சுத்திகள்
பந்து பந்தாய் வாகும்.

தேங்காய் 2 பால் பிழிந்து
கொண்டு அதல் சுத்தி செய்த பாலம் பலம் ஒன்று
இந்துப்பு சீனப்பு, வளையலுப்பு சவுந்துப்பு
கல்லுப்பு இவைகள் வகைக்கு பலம் வ தாள்

செய்து வெல்லத்துடன் பால் விட்டு அரைத்து பாத்திரத்தில் விட்டு காய்ச்சி சிவந்து வருகிற பக்குவத்தில் எடுத்து சீசாவில் வைத்து கொண்டு நாள் தவறாமல் நாலு துளி கொடுக்க பேதியாகும். வாய்வு கண்டிக்கும். நாக்கு சுத்திகள் ஆகும். பேதியதிகமானால் மோரும் சாதமும் சாப்பிடவும். கை கண்டது.

ஒரு பெரியவர் முறை - ஒருதலை நோவுக்கு நேத்திர நோவுக்கு கருத்து கிசவாற்கு.

இராத்திரிக்கு பள்ளி கொள்ளும் போது பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக் கொண்டு உதயத்தில் படுத்த படியே இரண்டு முழுங்கு (மடக்கு) குடித்து பின்பு எழுந்திருக்கவும் இப்படி மூன்று நாள் சாப்பிடவும் தீரும்.

வேறுமுறை ஒத்த தலை நோவுக்கு

நல்லெண்ணையை ஒரு ஆல்க் கரண்டியில் விட்டு காயும் போது அதில் நாகத்தாளி பூவை கசக்கி போட்டு பொங்கி வருகிற எண்ணையை கீழே விடாமல் ஒரு கிண்ணத்தில் பிடித்து கொண்டு

அதை குளிகையோடு தாலயாள் கண்ணத்தில் தேய்ந்து கொண்டு முழுகவும். இப்படிக்கு நான்கு, ஐந்து முறை முழுகிவர ஊட்டு நீடிப் போம்.

வாலாஜா பேட்டை காவேரி அம்மாள் முறை

வீர செந்தூரம்

மாமரத்தில் இருக்கிற பாம்பாற எறும்பு முட்டையை அரைத்து குகை செய்து அதற்கு சுத்தி செய்த வீரம் போட்டு மூடி சீலை செய்து புடம் போட செந்தூரமாகும்.

தாளக உருக்கட்டு

அ.

தாளகம் பலம் 1 கல்லு மட்டியான் சுண்ணாம்பு கல் போட்டு நீத்து .... இப்படி மூன்று தடவை வாங்கவும். அதை நாயுருவி இலையை அரைத்து கவசமிட்டு வேப்பங் கட்டையை துளைத்து அதில் வைத்து வெப்பந்தாளை போட்டு இடுக்கு மேல் அப்படி சீலை செய்து கெஜப் புடம் போட உருக்கி அடியில் இறங்கி கட்டியாய் இருக்கும்.

ரசித பற்பம்

சிவகரந்தை இலையும் அருகம்புல்லு ஆவும் சமனாய் சேர்த்தரைத்து நாபாயாக்கி கவசம் செய்து சீலைமண் செய்து புடமிட பற்பமாம்.

சூதகட்டு பற்பம்

சட்டியில் ரசம் விட்டு ஆவாரம் பூவை போட்டு வறுக்கக் கட்டாகும். பின்பு தாசனா பூவை போட்டரைத்து வில்லை செய்து சீலைசெய்து புடம் போட பற்பமாம்.

காசேவிமுறை சகல வியாதிக்கும்

அஞ்சாங்கக்கல் உப்பு கெந்தி ரசம் சுத்திசெய்த வீரம் இந்த நாலும் சமனாய் அரைத்து பச்சையாகவே அனுபானமறிந்து கொடுக்க சகல வியாதியும் தீரும்.

வீர சுத்தி

முதல் கள்ளிப்பாலில் இரண்டாவது முலையாலை ரசத்தில் மூன்றாவது எருக்கம்பாலில் கொதிக்கவும் நல்ல சுத்தி பின்பு நோயை எடுக்கவும்.

அன்னபேதிசெந்தூரம்

ஒரு அகலில் எலுமிச்சம் பழ ரசம் பிழிந்ததில் இளரசம் சாயாய் விட்டு அதில் அன்னபேதியை வைத்து ஓடு சீலைமண் செய்து புடம் போட செந்தூரம் ஆம். சிலாசத்து பற்பமாவது சங்கு பற்பமாவது கூட சேர்த்து அநுபானத்தில் கொடுக்கவும்.

பாண்டு உபாறுகட்டுக்கு

மடங்கநாரியாலையை எடுத்து அதற்கு சமனாய் கோமயம் சேர்த்து பிசைந்து பிழிந்து கொண்டு அந்த சாற்றில் சூரத்தை வெங்காரத்தில் பொரித்தது வராகனெடை -3-ல் மடி ரசத்தில் போட்டு உள்ளுக்கு கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தள்ளவும். மறுபத்தியம் மூன்று வேளை அரை உப்பு, புளி சேர்க்கவும் தீரும்.

நேரையர்குறை கெந்தக பற்பம்

அசுர்த்தமில்ல கெந்தகம் பலம் 1 இடைக்கிடை அரைகீரை போட்டு ஒரு நாள் அரைத்து உருட்டி சீலை செய்து தகுந்த புடம் போட பற்பமாகும் வியாதிகளுக்கு தகுந்த அநுபானத்தில் கொடுக்கவும்.

நாகபற்பம்

நாகம் பலம் ஒன்றுக்கு சுத்தி செய்தது பேய்பீர்க்கு இலை அரைத்து கவசஞ் செய்து தகுந்த புடமிட பற்பமாகும். தகுந்த உபாதிகளுக்கு அநுபானத்தில் கொடுக்கவும்.

ரசபற்பம்

ஒரு சட்டியால் ரசம் விட்டு குப்பைமேனிச்சாறு விட்டு மெழுகுபோல் திரண்டு வரும் அதை வறுக்க பற்பமாகும். சகல உபாதிக்கும் அநுபானத்தில் கொடுக்கவும்.

ரத்த உபாதிக்கு கஷாயம்

பரங்கிச்சக்கை பலம் - உ, சுக்கு பலம் 1, நிலவாரை பலம் 1, சோம்பு பலம் 1, சீரகம் பலம் உ, நன்னாரி பலம் 1, காமயந்தன் சுகேலம் பலம் 1, முசுமுசுக்கை வேர் பலம் 1 இவைகளை சூரணம் பண்ணி சூடாய கஷாயம் வைத்து பனங்கற்கண்டு போட்டு காய்ச்சி குடிக்கவும். ரத்த உபாதிகள் யாவும் தீரும்.

பஞ்சசூதமெழுகு சூதசெந்தூரம் சகலவியாதிக்கும்

ஆதியாம் வேதாந்த பொருளாய் நின்ற
அன்பான மகேசுபரனை தொழுது போற்றி
சோதியெனும் விளங்குகின்ற ஆயா பாதம்
துணையாக கருத்தில்வைத்து துன்பம் நீங்க
நீதியாய் நடக்கின்ற பெரியோர் பாதம்
